Registered at the G. P. O. AS A NEWSPAPER

சன்மார்க்கபோதினி.

பத்திராவிலைவிகிதம்
வருஷத்துக்கு ரூபா க-டு0
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் [illegible]
இந்தியாவுக்கு சதம் [illegible]
பிறதேசங்களுக்கு [illegible]

SANMARKA POTHINI

விளம்பரவிலைவிகிதம்
வரி ஒன்றுக்குச சதம் 1
௰0 க்குமேல் ஒருவரிக்கு 9
௫0 க்கு மேல் 8
இணைப்பிரசுர மொவ்வொன்றிற்கும்3-ல் ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற் பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every other Tuesday

VOL. XXXII. JAFFNA October 10th 1916 No 20

௩௨ம் புத்தகம் யாழ்ப்பாணம் ௧௯௧௬ம் ௵ ஐப்பசி ௰௨ செவ்வாய்க்கிழமை சங்கியை ௨௦

LIBRARY 10-1995 UNIVERSITY OF JAFFNA

குடிவெறி.

தற்காலம் குடிவெறி பரவியிருக்கும்வேகமாக வேறோர் தீமையும் பரவவில்லை. அதனால் வருந் தீமைகளுக்கு அளவில்லை. கோட்டில்வரும் கிறிமினல் வியாச்சியங்களில் மிகுதிப்பற்றானவை குடிவெறியாலேயே நடைபெறுகிறது. தற்கால அரசாட்சியாரின் மதுபான ஒழுக்கினால் குடிவெறி குறைகிறதென்பது தப்புச் சமாச்சாரம். முன் ஒட்டிப் பதுங்கி மரமேறிகள் வீட்டுக்குப் போய்வந்தவர்கள் இப்போது தவறணைகளிற்சென்று அட்டணைக்காலும் போட்டு மட்டுக்குமிஞ்சிக் குடித்துவிட்டுத் துட்டத்தனஞ் செய்கிறார்கள். அதிகம் வெறிக்கக்கூடிய புளித்த நாற்றமான கள்ளையே குடிகாரர் விரும்புவதால் அவ்விதகள்ளிருக்க வசதி தேடிக்கொள்ளுகிறார்கள். மதுபரிபாலன இன்ஸ்பெக்றர்மாரும் சேவகரும் அடிக்கடி இடம்மாறுவாரானால் தவரணைகாரரில் கட்டுக்கொள்ள இடமிராது. அதனால் ஒருவாறு நன்மையுண்டாம். எப்படிப்பார்ப்பினுந் தற்கால ஒழுங்கு இன்னுந் திருத்தப்படவேண்டும். மதுவிலக்குச்சபையாருக்கு அரசாட்சியார் பொருளுதவி செய்யவேண்டும். கஞ்சாவினால் மயக்கமன்றி அதன்வெறியினால் தீமைசெய்வாரில்லை. ஆனால் அச்செடியை மருந்துக்குத்தானும் உண்டாக்கக் கூடாதென்று கடும்பிரமாணமும் கடுந்தண்டனையுமிடும் அரசாட்சியார் இதைக்குறித்துப் புனராலோசனை செய்யுங்காலமும் வரும். தற்போது குடிவெறியைக்குறித்து இங்கிலந்தில் எழுந்திருக்கும் அருட்சி தற்கால மகா யுத்தத்தின்பின் பலமாகி நன்முடிவைக் கொண்டுவருமென்பது நமது நம்பிக்கை. அதற்கிடையில் நம்மூரிலுள்ள அருமைப் பெருமையான நண்பரும் பந்தினரும் கெட்டுப்போவார்களோவென நாம் அஞ்சுகிறோம்.

நம்மூர்நிலையோ எவ்வூரிலுங் கேடாயிருக்கிறது. முன்பின் ஒருமைல் தூரத்துள்ளே இரண்டொரு கள்ளுத்தவரணையும் ஒருசாராயத்தவரணையுமிருக்கின்றன. கள்ளுத்தவரணையும் சாராயத்தவரணையுங் குறுக்குவழி பார்த்தால் கால்மைல் தூரத்துள்ளே இருக்கிறது. இதற்குப் பிரமாணமுண்டா? வாயிலுள்ள சாராயநாற்றத்தைச் சகித்தாலும் கள்நாற்றத்தைச் சகிக்கக்கூடவில்லை. ஐந்தாறு முழத்துக்கு அப்பாலின்று பேசினாலும் அதின் நாற்றமெழுந் துர்நாற்றம் மிக வெறுப்பைக்கொடுக்கிறது. அவ்வேளையில் நேரே பந்தமித்திரரை அகலப்போகும்படி எப்படிச் சொல்லலாம். "காசைக்கொடுத்துப்பேயைக்கொள்ளும்" நீர்க்கு அறிவில்லையா? தம் சீவியத்தையும் சுகத்தையும் நேர்மையையும் அது கெடுத்துவிடுமென்பதைச் சற்றேனும் அறியீரா? இத்தீமை கெட்ட கூட்டுறவுகளாலேயே மிகுதிப்பற்றியுண்டாகிறது. அது கொள்ளைநோய்போற் பரவி அடுத்தவர் கொடுத்தவர்களெல்லாரையுங் கெடுத்துவிடுகிறது.

குடிவெறியே அடிபிடிக்குக் காரணம். குடிவெறியே கூக்குரலுக்குக் காரணம். குடிவெறியே கெட்டகூட்டத்திற்குக் காரணம். குடிவெறியே வியாச்சியத்திற்குக் காரணம். குடிவெறியே கொலைகளுக்குக் காரணம். குடிவெறியே விபசாரத்துக்குக் காரணம். குடிவெறியே திருட்டுக்குக் காரணம். குடிவெறியே தூஷணவார்த்தைகளைச் சிறுவருக்குப் பயிற்றக் காரணம். குடிவெறியே அடுத்தவர் தொடுத்தவரின் நித்திரைப் பங்கத்துக்குக் காரணம். குடிவெறியே ஊரில் சமாதானத்தைக்குழப்பக் காரணம். குடிவெறியே சன்மார்க்கத்தை அழிக்குங் காரணம்.

நண்பரே! இனசனரே! இன்றைக்கே அக்கூட்டத்தையும் நாட்டத்தையும் ஒட்டத்தையும் விட்டுவிடுங்கள். இல்லையேல் பிற்காலந் துக்கப்படுவீர்கள். உம்மையன்றி உமது சந்ததியையும் இது வருத்துமென்பது நிச்சயம்.

சுந்தரன் செய்த தந்திரம்.

(19ம் இலக்கப் பத்திரத்தொடர்ச்சி)

கயிறுநீவுங் கரையிலிறங்கிய சுந்தரன் அங்குள்ள நாகம்மாள்கோயில் அர்ச்சக பண்டாரத்தைக்கண்டு அங்கிருந்த ஓர் மரத்தில் வசித்த சர்ப்ப விசேடணங்களையும் பூர்வ கல்வெட்டையுங்கண்டு அப்பண்டாரத்திடம் தான் ஓர் மந்திரவாதியென்றும், அத்தல தரிசனைக்குப் போகும்படி கற்பிக்கப்பட்டு வந்ததாயும் பேய் பில்லி சூனியம் ஏவல்களை அகற்றக்கூடுமென்றுந் தெரிவித்தான். அப்பண்டாரமோ மனமுவந்து அவனை உபசரித்துச் சிலநாள் தன்னுடனிருக்கும்படியும் போதிய வரும்படி காட்டுவதாயும் அதில் தனக்கேதுங் கொடுக்கும்படியுங் கேட்டுக்கொண்டான். சுந்தரனே செலவுதள்ளி லாபத்தில் கால் ஒன்று தருவதாய் வாக்குப்பண்ணவே பண்டாரம் மிக மகிழ்ந்து தமது நாமம் என்னவென்று கேட்டான். அதற்குச் சுந்தரன் "பரமானந்தயோகி" என்றான். அதைக்கேட்டபண்டாரம் அத்திக்கெங்கும் அத்தலயாத்திரைகாரருக்கும் மந்திரங்களில்வல்ல "பரமானந்தயோகி" வந்திருக்கிறாரென்று அவரது கீர்த்தியை எங்கும் அறியும்படி புகழ்ந்துகூறியதுமன்றித் தருணத்துக்கேற்ற உடை கைப்பிரம்பு ஆதியவைகளையுஞ் சம்பாதித்துக்கொடுத்தான். "ஐந்தும் மூன்றும் அடுக்காயிருந்தால் அறியாப்பெண்ணுங் கறியாக்குவாள்" என்றபடி சுந்தரனுக்குத் துணையுங்கிடைக்கவே துணிவுடன் வேலைசெய்யத்தொடங்கிவிட்டான். அன்றுமுதல் பேய்பிடித்தவர்கள் தீராநோயாளர் யாவருங் கொண்டுவரப்பட்டார்கள். சுந்தரனே வெள்ளிக்கிழமைகளில் பேய்க்குப் பார்வைபார்க்கவும் செவ்வாய்க்கிழமைகளில் சூனிய முதலியவைகளைக் கண்டெடுக்கவும் நாட்குறித்துக்கொண்டான். அப்படியேவந்த மனநோய்கொண்டபலர் நம்பிக்கை யேசிட்டினால் உடனே சொஸ்தமாயினாரென்று தெரிவிக்கவே பணமும் சனமும்வந்து சூழ்ந்துகொண்டன. ஒருநாள் ஓர் வாதநோய்பிடித்தவள் கொண்டுவரப்பட்டாள். உடனே சுந்தரன் மடைபரவி மந்திரஞ்செபித்துப் பந்தவெளிச்சத்தில் குங்குலியப்பொடியைக்காட்டி இதோ இந்த விபூதியைப்பார்; இதை இந்தப் பந்தத்தில் எறிகிறேன்; அது உன்னிற்குடியநோய் பற்றியெரியுந்தன்மையைக் காட்டுமென்று உரத்துக்கூவிப் பந்தத்திலெறியவே அது குபீரென்று பற்றிப்பொறிவிட்டெழ "அப்பமெப்படிச்சுட்டாளோ தித்திப்பை யெப்படியிட்டாளோ" வென மதிமயங்கினவன்போல விபூதி புவிதிசுபோலெழுதல் புதுமையே புதுமையென யாவரும் பிரமித்தனர். நோயாளியுங்கண்டு திகிலடைந்தாள். எழுந்திரு என்று அவன் அதட்டினதினால் அவள் பயந்து திடீரென்று எழ நடநடவென்றதுக்க அவள் பலவந்தமாய் நடந்தாள். அங்கு நின்றோர் "மருண்டவன்கண்ணுக்கு இருண்டதெல்லாம் பிசாசு" என்பதுபோற் றிகைத்து ஒருவருடம் பாயும் படுக்கையுமாயிருந்த இவள் நடப்பது ஆச்சரியமென்று யோகியைப் புகழ்ந்தார்கள். வேண்டிய பொருளுதவியுஞ் செய்தார்கள். அடுத்தநாள் அவள் முன்போல முடக்குமுறவே மறுபடி வந்து யோகியைக்கண்டு சங்கதியைத் தெரிவித்தார்கள்; யோகியோ அவ க்கு ஆரோ செய்வினைசெய்திருக்கிறார்க அதை எடுத்தாற்றான் முழுச்சொஸ்தமுண்டாகுமென்றான். அதைக் கேட்டவர் அதைத்தாமேஎடுத்து அவளைச் சொஸ்தமாக்க வேண்டுமென்று பிரார்த்திக்க சுந்தரனே செவ்வாய்க்கிழமை தவ வைத்துக் கோழி முதலிய பலிக்குரிய வகளும் எலுமிச்சம்பழம் இளநீர் முதலிய படைப்புக்குரிய பொருட்களும் கர்ப்பூ சாம்பிராணி முதலிய தூபவர்க்கங்க ங் கொண்டுவரும்படி திட்டஞ்செய்து ட்டு, அவளே மயிர் என்பு பழையதுணி முதலியவைகளைத்தேடி ஓர் பாவைசெய் மயிர்முதலியவைகளைச்சுற்றிச் சேர்த் ள்தாழ்த்துஎடுத்துஉலரவைத்துவிட்டா காய்ந்தஎலுமிச்சம்பழத்தில்மயிர்சுற்றி ஞ்சள்பூசிக் காயவைத்து அதையும்மண் ட்டுவதற்குஎடுத்துவைத்துக்கொண்டா செவ்வாய்க்கிழமைவரவே படைக்க ண்டியவைகளைப்படைத்து, கொளுத்த வண்டியவைகளைக் கொளுத்தி, அறுக்க ண்டியவைகளை அறுத்து மந்திர உச்சாடனஞ்செய்து ஆவேசமுற்று அதட்டி அக்கோடி ஓடிவா இவ்விடத்தில் வெட் என்றான். அங்கே வெட்டினபோது ஒ காணப்படவில்லை. ஓ! சத்துரு இருக்கிறான்! அங்குமில்லை, இங்குமில்லையென்று ச ங்களை வேறுபராக்குக்காட்டிச் சால்வை ள்ளிருந்த பாவையையும் பழத்தையும் க்குழிக்குள்போட்டு வெட்டியமண்ணை காலால்மூடிவிட்டு மீண்டும் அக்கினி கோடி உருச்செபித்துக் கூக்குரலிட்டு அடுக்குக்கருகில் மறுபடியும் வெட்டும் செய்து, பார் கவனமாய்ப்பார் அங்கிருக்கிறது செய்வினை என்றான். நின்றவர்க பார்த்து இல்லையென்னவே, உடுத்த சீலையையும் எறிந்துவிட்டு ஓடிப்போய்த் தா வறுக அப்புவிருந்த மயிர்சுற்றிய பா வையையும் மஞ்சள்பூண்ட பழைய எலு சம்பழத்தையும்எடுத்துக்காட்டி ஓகோ! இதுதான் செய்தசெய்கை. ஆனால் இன்னு மோரிடத்தில் தாழ்த்திருக்கிறது. அதை மறுசெவ்வாய்க்கிழமை பார்த்துக்கொள் ளலாமென்று சொன்னான், சனமருள் சா திமருளென்பதுபோல அங்குநின்றோ லெலாம் மதிமயங்கி யோகீஸ்வரர் சிவனே யெனப் புகழ்ந்தனர். அடுத்தநாள் சுந்தர ன் ஓர் பொட்டளி சிப்பியைக்கொண்டுவந்து பண்டாரத்திடம் கொடுத்து இதை மிகு பத்திரமாய் உமது பெட்டகத்தில் வைத்துப் பூட்டிவிடும் என்று கற்பித்துவிட்டு அன்றிரவு துயின்றவன் கூக்குரலிட்டு எழுந்து இப்பொழுது நமது பெரிய யோகீஸ்வரர் மன்னாரில் வந்துநின்று என்னைக் கூப்பிடுகிறார். உடனே நான் அங்கு போய் அவரைக் கூட்டிவரவேணும்; அதற்கு எத்தனஞ்செய்யென்றான். பண்டாரமோ மன்னாருக்கு ஓர்வத்தை பயணமாய் நிற்கிறது; அதில் ஏறிப்போகலாமென்றான். உடனே அதில் ஏறியிருந்துகொண்டு தொகையிற் கைவையாமல் உன்னிடமிருந்தால் கொஞ்சப் பணம் கொண்டுவா; அது நமது முதலாளியை உபசரித்தற்காகச் செலவுசெய்யவேண்டுமென்ன, இருந்த இருபது இறைசாலையுங் கொண்டுவந்து கொடுக்கச் சுந்தரன்பயணமாய்விட்டான்.

(வரும்)

கையொப்பவரவு.

Telukanson
Mr. K. V. Tambimuttoo 2-25
யாழ்ப்பாணம்
" க. சவிசிமுத்து 2-00
J. B. Ariyanayagam Esq.
Colombo Attorney
General Office 10-00

பிழைதிருத்தம்.

நமது பத்திரிகையின் தலையங்கத்தில் 2ம் இலக்கப் பத்திரிகையில் Januray 11 என்றிருப்பதை 25 என்றும், 18ம் இலக்கப்பத்திரிகையில் August என்றிருப்பதை September என்றும் திருத்திக்கொள்க.

யாழ்ப்பாணம்.

வான்சீர்—காற்றமைதி. இரவிற் சிறுகப் பனியுண்டு. ஊரில் காய்ச்சல் கழிச்சல் வயிற்றுளைவு சின்னமுத்தாதிய ரோகங்கள் ஆங்காங்குண்டு. மரணவீதமுமதிகம்.

உத்தியோகஸ்தர் மாற்றம்—யாழ்ப்பாணக் கச்சேரியிலே இரண்டாவதாயிருந்துவரும் மெஸ், டிறிச்செற்றுரை அவசாவளைக்குப் பொலிசுநீதிபதியாய்ப் போகின்றார். இவருடையஇடத்துக்கு மெஸ், உவாடியர்துரை நியமிக்கப்பட்டார். இவருடைய இடத்துக்குக் காலிக் கச்சேரியிலிருக்கின்ற மெஸ், கேயிஸ்துரை வருகின்றார்.

களவு—சென்ற செவ்வாய்க்கிழமையிரவு வேம்படி உவெஸ்லியன் மத்திய வித்தியாசாலைக்குள்கள்வர் நுழைந்து மூன்று இரும்புப்பெட்டிகளை எடுத்துப்போய் வயலுக்குள்ளே உடைத்துப் பெட்டியிலிருந்த பொருட்களை எடுத்துப்போயினராம்.

நீர் அசௌக்கியமாய் இருக்கிறீரா?

எந்தவிதமான வாதையினாலாவது உமக்கு அசௌக்கியம் உண்டானபோது, நீர் "நான் தினந்தோறும் ஒரு தடவையாவது கொல்லைக்குப் போய் வருகிறேனா?" என்று கேட்டுக் கொள்ளவேண்டும். "இல்லை" என்று ஏற்பட்டால், (இராத்திரி படுக்கைக்குப்போகும் பேருது) டோன் என்பவருடைய ஜீர்ண மாத்திரைகளில் (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) இரண்டு அல்லது மூன்று நீர் எடுத்துக்கொள்ளும். மறுநாள் காலையில், மலக்கழிவு சகஜமாய் ஆகும். சுகமுண்டாகும். மலபந்தம் என்பது என்னவென்றால், மலம் குடலில் தங்கவேண்டிய காலத்திற்கு அதிகமானகாலந் தங்கி, விஷத்தன்மையுள்ள வஸ்துக்களையுண்டாக்கி விடுவதேயாம். இந்த விதமான மலபந்தத்தினாலேயே இந்த உலகத்தில் கணக்கில்லாத ரோகங்கள் பிறக்கின்றன. ஆகையால், கீழே குறித்திருக்கிற ரோகங்கள் பலவும் மலச்சிக்கலினாலேயே உண்டாகின்றன என்று அறிந்துகொள்ளவேண்டும். பித்தப்பை ரோகங்கள், பித்தம், பித்தக்காய்ச்சல், அஜீர்ணம், பசிமந்தம், தைரியவீனம், அசதி, இதயவாதை, தலைச்சுற்றல், தலைநோய், வயிற்றுப்புசம், இரைப்பையிற்புளிப்பு; ஸ்திரீகளுக்கு உண்டாகும் ரோகம் முதலானவை. மலபந்தம் நீடித்திருந்தால், இரத்தம் கெட்டுப்போய், தேகசௌக்கியம் கெட்டுப்போகும். (டோன்ஸ் டின்னர் பில்ஸ்) டோன் அவர்கள் ஜீர்ணமாத்திரைகள் மூலிகைகளிலேயே தயாரானவை.

இம்மாத்திரைகள், குடலிலிருந்து மலத்தையும், விஷவாயுவையும் வெளியாக்கி, பித்தப்பையைச் சரிப்படுத்தி, பித்தநீரைத் தாராளமாய்ப் பெருகச்செய்து, தேகத்தைச் சௌக்கியமும் அழகுமுள்ளதாக்கும். இம்மாத்திரைகள் புருஷர் ஸ்திரீகள் சிறுவர்கள் ஆகிய எல்லாருக்குமே சரீரவாதையைச் சீக்கிரத்திலே நீக்கிச்சுகம் உண்டாக்கும்.

DOAN'S
DINNER
PILLS

12 அணா புட்டியளவு.

விலை அணா 4, 8, 12 உள்ள புட்டிகள் கிடைக்கலாம். 12 அணா புட்டியில் 60 மாத்திரை இருக்கும். 4 அணா புட்டியைவிட 5 பங்கதிகம் இருக்கும்..

இவை, சீமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆண் டப்பிலியு. எச். ஊல்லர் துரையவர்களிடத்திலும் கிடைக்கும். (Tam.

பள்ளிக்கூடஞ்சுடல் — நீர்வேலியிலுள்ள கத்தோலிக்க கலாசாலைக்கு கட்டாமுட்டிகளாரோ சென்றவாரம் நெருப்பிட்டெரித்துவிட்டார்கள்.

நியாயதுரந்தரரைத்தாக்கல் — தமக்கு விரோதமாய்நின்ற ஓர் நியாயதுரந்தரரைப் பருத்தித்துறையில் சிலர் காத்திருந்து தாக்கினரெனக்கேள்வி. இதுவும் வீரத்தன்மைதான்.

கொலை — மல்லாகத்தில் ஒருவன் குடித்து வெறித்து வீட்டுக்குச்சென்று தன் பெண்சாதி பிள்ளைகளைக் குத்தி வெட்டிக் காயப்படுத்திவிட்டுத் தானுங் கிணற்றுள்வீழ்ந்து உயிர்துறந்தனன். காயப்பட்டோர் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே அபாயமான நிலையிலிருக்கின்றனர்.

நியாயப்பிரமாணபரீட்சை — சிறிதுகாலத்துக்குமுன் நடத்தப்பட்ட நியாயப்பிரமாணப் பரீட்சைப்பெறுபேறு வெளியாய்விட்டது. பிறக்றர்மாருக்குரிய மத்தியபரீட்சையிலே 29 பேர் சித்திபெய்தினர். அவருள் தமிழர் 10 பேர். கடைசிப்பரீட்சையிலே சித்திபெய்தினோர் 22 பேர், இவருள் ஒருவர்மாத்திரமே தமிழராம்.

இலங்கை.

எம்தேசாதிபதி — இவர் சுகமடைகின்றனர். ஆபத்தான நிலைமையிலேயிருந்து அவர் சுகநிலைக்குவந்ததைப்பற்றி யாவரும் மிக மகிழுகின்றனர்.

கட்டாயப்படைமுயற்சி — இலங்கையிலுள்ள அங்கிலேயரனைவரும் யுத்தப்பயிற்சி செய்யக் கட்டாயப்படுத்தப்பட வேண்டுமென அரசாட்சியார் தீர்மானித்திருக்கின்றனர். இதைப்பற்றிய சட்டமொன்று விரைவில் வெளியாகும்.

ஓர் பாரியகளவு — கொழும்பு நகையியாபாரியொருவரின்கடையை யாரோ சிலகள்வரிடித்து 5000 ரூபா பெறுமதியான நகைகளைக் களவாடிப்போயினர்.

கஞ்சாவிற்றவர்க்குக் கடுந்தண்டனை — கொழும்பிலே கஞ்சாவிற்ற ஒருவருக்கு 1000 ரூபா அபராதமும் ஆறுமாச மறியலும் விதிக்கப்பெற்றனர். இவர் சுப்பிறீங்கோட்டருக்கு அப்பீல்செய்தும் பலன்படவில்லை.

மிகப்பெரிய மரவள்ளிக்கிழங்கு — கொழும்பிலிருந்து சிலமைல்தூரத்திலேயுள்ள மெஸ், டி சொயிசாவின் றப்பவானு என்னுந்தோட்டத்திலே 8 இஞ்சுச் சுற்றளவுள்ள ஒரு மரவள்ளிமரத்திலே ஒரு பெரிய கிழங்கு கிண்டியெடுத்து அதை நூதனகாட்சிக்கு வைத்திருக்கிறார்கள். அது 25 அடிநீளமும் 2 அந்தர் நிறையுமுள்ளதாம். எல்லாரும்போய் அதனை நூதனமாய்ப் பார்க்கிறார்களாம்.

கல்லூரித்தலைவர்சிட்சைக்குள்ளானார் — கொழும்பிலே கற்பித்தான்தோட்டத்திலே சற்றன் கல்லூரியென ஒருகல்லூரியுண்டு. அதிலேபடிக்கும் மாணாக்கர் லண்டன்சருவகலாசாலைப் பரீட்சைக்குப்போவதற்காக அக்கல்லூரியின் தலைவர் மெஸ், ஜி. சி. விஜயவரிடம்சென்றவருடம்சோதனைச்செலவுக்காகக்காசுகொடுக்கக்கல்லூரித்தலைவர் 3 பேருடைய பணத்தை அனுப்பாதுவிட்டார். மாணாக்கர் கொழும்புப் பொலிசுக்கோட்டிலே கிறிமினல்வழக்கு வைத்தார்கள். நீதிபதி வழக்கைவிளங்கிக் கல்லூரித்தலைவருக்கு ஆறுமாச மறியல்விதித்தார். கல்லூரித்தலைவர் அப்பீல்கேட்டுப் பிணையில்நிற்கிறார்.

இந்தியா.

தீவர்த்திக்கொள்ளைக்காரரும் பொலிஸ சுப்பிரின்டென்டனும் — ரங்கூனைச்சேர்ந்த சென்சாடாவில் ஒருவீட்டில் தீவர்த்திக்கொள்ளைக்காரர்புகுந்து ஸ்திரி புருஷரான ஆறுபேரைப் பிடித்துவைத்துக்கொண்டு திருட ஆரம்பித்தனர். கிராமத்தலைவன்வரவே அவனையுங் கொள்ளைக்காரர் படுகாயப்படுத்தினர். சுப்பிரின்டென்டன்நித்திரையிலிருக்கும்போதே ஒருவன் எழுப்பிச்சங்கதியைச் சொன்னான். அவர் ஒருபொலிசுடன் துப்பாக்கி சகிதமாய் அங்குசெல்லுகையில் கொள்ளைக்காரரின் வெடிச்சத்தங்கேட்டது. தீவர்த்திகளும் எரிந்துகொண்டிருந்தன. அங்குசென்று கொள்ளைக்காரருக்குச் சுட்டதில் ஒருவன் மாண்டும் இருவர் காயப்பட்டும்போயினர். ஒருபர்மியன் முகத்தில் வெள்ளைபூசிக்கொண்டு சட்டியை எடுத்துக்கொண்டுவந்தான். அவர் பின்னிட்டுப்போய் வேறோர் துப்பாக்கியை யெடுத்துப் படுக்கையறையிற் சுடவே கொள்ளைக்காரன் பிரேதமாய்வீழ்ந்தான். இப்பரக்கிச்சூடுபட்டவரில் இருவர் கண்டுபிடிக்கப்பட்டனர். பணப்பைகளெல்லாஞ் சிதறப்பட்டுக்கிடந்தன. மாடியில் வைக்கப்பட்டிருந்த சில நகைகளும் 600 ரூபாயுங் காணாமற்போயின.

பர்மானஞ்சும்புகைக்கப்பல் — லிவர்ப்பூலிலிருந்து ஆனிமீ 19உ புறப்பட்ட இக்கப்பலைப் புரட்டாசிமீ 1உ பார்ட்சையிட்டில் ஒருதுருக்கிய விமானம் எதிர்த்து ஆகாயத்திலிருந்து குண்டுப்பிரயோகங்கள் செய்தது அவை பாதிசகப்பலில் வீழ்ந்தன ஒருகுண்டு காலுபடகில்வீழ்ந்து ஒருவன்கொல்லப்பட்டு 5 பேர்களுக்காயப்பட்டனர் மற்றொருகுண்டு சிலபடைகளின் சகுவில்வீழ்ந்தது அதனால் சில சிவில்உத்தியோகஸ்தர் கொல்லப்பட்டு சிலர் காயப்பட்டும்போயினர் இரண்டுநாட்கழித்துப் பர்மாக்கப்பல் றங்கூனுக்குப் புறப்பட்டது

யுத்ததந்தி.

பிரான்சுபெல்சியசெர்மனியயுத்தம்.

24உ ஸ்ழுவில்செயின்வாஸட்டென்னுமிடத்திற்குக் கிழக்கேயுள்ள சத்துருஅரணில் பிரித்தானியர்நுழைந்து பலரைச்சிறைபிடித்தனர்.

25உ பிரித்தானியவிமானிகள் சத்துருபிறையில் ஸ்ரேசன்களையும் போக்குவரவையுந்தாக்கிச்சேதமுண்டாக்கினர். நேற்றுநடந்த ஆகாயச்சண்டையில் 6 சத்துருவிமானங்கள் சேதமாயும் மூன்றுசிறிதுசேதமாயும்போயின 3 பிரித்தானியவிமானங்களைக்காணவில்லை.

26உ மார்வெல் லெஸ் பூப்ஸ என்றஅரண்படுத்தப்பட்ட இரண்டு கிராமங்களைப்பிரித்தானியர் கைப்பற்றினர் மார்வல் பூமிக்குள்ளிருக்கும் பாதைஸ்தலங்களுடனும் இருப்புமுள்வேலியுடனும் அரண்படுத்தப்பட்டிருக்கிறது. இவை பிரித்தானியர் கைப்பட்டதால் விசேஷ பலங்கிடைத்திருக்கிறது. கோம்பில்சுக்குள்ள சத்துருக்களின் போக்குவரவுகள் துண்டிக்கப்பட்டன. அநேகர் சிறைபிடிக்கப்பட்டனர். திரளான மெசின் பீரங்கிகளும் யுத்தசாமான்களும் பிடிக்கப்பட்டன.

24உ பிரான்சுப்போர்முனையில் 20 சத்துருவிமானங்கள் கீழேவீழ்த்தப்பட்டன.

25உ பிரான்சியவிமானங்கள் பல இடங்களில் குண்டெறிந்ததில் ரோர்ம்பாச என்னுமிடத்தில் ஒரு தீவிபத்துண்டாயிற்று.

26உ பிரான்சிய பிரித்தானியர்சேர்ந்து கோம்பில்சுக்கும் ரான்கோட்டுக்கும் மத்தியிலுள்ள செர்மனிய ஸ்தலங்களையும் பாதுகாப்பு ஸ்தலங்களையும் ஒரே சமயத்தில்தாக்கப் பிரான்சர் பிரிகோட்டின்தென்பக்கத்திற்குத் தம்படைவரிசைகளை நீக்கிப்போய் பிரிகோட்டுக்கும் 148ம் குன்றுக்கும் மத்தியிலுள்ள அரண்படுத்தியஇடத்தைப்பிடித்துக்கொண்டார்கள். அவர்கள் ரான்கோட்டைப் பிடித்து பெத்தூனுக்குப்போகும் ரோட்டுக்குக் கிழக்கேயுள்ள ஸ்தலங்களை விஸ்தாரமாக்கிக்கொண்டார்கள். 130ம் குன்றைச்சேர்ந்தார்கள். வடபக்கக் கால்வாய்க்கருகிலுள்ள அரண்களையும் பிடித்துக்கொண்டார்கள். 400 பேருக்குமேல் காயமடையாமற் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

26உ பிரித்தானியர் கோம்பில்சில் நுழைந்து சத்துருக்களைஎதிர்த்தும் அவர்களைமீறி 1500 பேரைச்சிறைபிடித்தனர்.

பிரான்சர் பிரிகோட்முழுவதையும் பிடித்தனர். சோம்நதிக்கரையில் 47 முறை ஆகாயச்சண்டை நடந்தன. 5 சத்துருவிமானங் கீழேவீழ்த்தப்பட்டன. 3 விமானங்கள் சேதத்துடன் கீழிறக்கச் செய்யப்பட்டன. வேறொருவிமான நடமாடமுடியாமற் செய்யப்பட்டது. வாவர்பகுதியிலும் ஒரு சத்துருவிமானங் கீழேவீழ்த்தப்பட்டது. பிரான்சுவிமானங்கள் மெட்ச்கோட்டைமேலும் றெயில்ஸ்ரேசன்கள் மேலும் தியான்வில் புகைரதப்பாதைமேலும் வேறுசில இடங்கள்மேலும் குண்டுகளெறிந்தன.

27உ திப்வால் என்னும்ஸ்தலமும், வைறிட்குன்றும், கோதன்சால்லும் பிரான்சரால் பிடிக்கப்பட்டன.

ஐக்கிய கட்சியார்சேர்ந்து கோம்லசையும் பிடித்துக்கொள்ளப்பட்டது. சத்துருக்கள் பூமிக்குள்ளிருக்கும் அறைகளுள் சேர்த்துவைத்திருந்த திரளான தளபாடங்களும் சாமான்களும் அகப்பட்டன. 100 செர்மன் காயக்காரரை விட்டுவிட்டுப்போகப்பட்டார்கள். அக்காடுகிலறையச் செர்மன்கபிணங்கள் கிடந்தன. பிரான்சர் பலனடைந்து ஒரு சிறியகாட்டையும் அரண்படுத்தப்பட்ட ஒருகுடி—த்தின் பெரும்பாகத்தையும் பிடித்தனர். இதுவரையில் காயமடையாத 1200 பேர் சிறைபிடிக்கப்பட்டார்கள். 30 மெசின்பீரங்கிகளும்பிடிக்கப்பட்டன.

வேர்டனில் தியாமான்டைரோக்கியும் பிளிரிஸைரோக்கியும் சத்துருக்கள் உக்கிரமாய்ப் பலமுறைதாக்கியும் பின்தள்ளப்பட்டார்கள். பிரான்சிய வேகதியும்படையார் கோம்பில்சிலுள்ளகல்லறைவரிசையைப் பிளந்துநுழைந்து அக்கிராமமெல்லாம் சேர்ந்தனர். தென்கிழக்கேயுள்ள ஒரு அரணையும் செர்மனிய படைவகுப்பையும் சிறைபிடித்தனர். பிரான்சிய பிரித்தானியர்சேர்ந்து பிறிகோட் மார்வல் என்ற இடங்களைப் பிடித்தபின் கோம்பில்சைப்பிடித்தனர்.

27உ பிரித்தானிய போர்முனையில் 48 மணிநேரத்துள் 3000 பேருக்குமேலே சிறைபிடிக்கப்பட்டனர், இரவில் சயாகோட் எப்பாய் முதலிய இடங்களைநோக்கி நாம் முன்னேறினோம், மூன்று சத்துருவிமானங்கள் சேதமாக்கப்பட்டன. 25உ ஆறுவிமானங்கள் கொஞ்சஞ்சேதமாக்கிக் கீழேவீழ்த்தப்பட்டன. கடற்படைவிமானங்கள் எட்டர்பெக் முதலிய இடங்களிலுள்ள ஆகாயக்கப்பற் கொட்டகைகள்மேற் குண்டுகளை எறிந்தன. அதனால் பெரிய கெடிவிபத்துண்டாயிற்று, நமது விமானங்கள் சேமமேதிரும்பிவந்தன.

28உ இன்று பிலேர்ஸ என்னுமிடத்திற்குவடக்கே 200 யார் தூரத்துள்ள குன்றிலுள்ள வைட்பிரீடனாட் என்னுமிடத்தைத்தாக்கி வசப்படுத்திக்கொண்டோம் நாம இரண்டுநாளத்தில் 10000 பேரைச் சிறைபிடித்தோம். நேற்று 2 சத்துருவிமானங்களும் 2 புகைக்கூண்டுகளும் சேதமாக்கப்பட்டன, நமதுவிமானங்களில் 2 காணப்படவில்லையென்று பிரித்தானியஅறிக்கை கூறுகிறது.

27உ பிரான்சுப் போர்முனையில் கல்லெல்வர் என்னும் ஆகாயவிமானி இரண்டு செர்மனியவிமானங்களையும் ஒரு புகைக்கூண்டையும் பிடித்துக்கொண்டார். இத்துடன் அவர் பிடித்தவிமானங்கள் 17 காலுவிமானங்கள் சேதமாக்கப்பட்டன. நமது 14 விமானங்கள் அப்பிவில்லில் 110 பெரிய குண்டுகளையும் மெயான் ரெயில் ஸ்ரேசன்மேல் 22 குண்டுகளையும் மான்ட்பாதனில் 17 குண்டுகளையும் எறிந்தன. நேற்று நாம் சத்துருக்களைத்தாக்கி சத்துருக்கள் பலமாய்ப்பிடித்திருந்த ஒரு காட்டைப்பிடித்தோம்.

28உ சத்துருக்கள் சோம்நதிக்கு வடக்கே நமது புதியஸ்தலத்தைப் பலமாய்த்தாக்கியுங் களைத்துவிட்டோம், நாம் 250 பேரைச்சிறைப்படுத்தி 8 மெசின்பீரங்கிகளையும் பிடித்துக்கொண்டோமென்று பிரான்சியசெய்தி கூறுகிறது.

29உ நாம் வதவர்பேன் என்னும் ஸ்தலத்தைத்தாக்கி அதிற் பெரும்பங்கை நமதுவசத்தில் வைத்திருக்கிறோம். அங்கே 24 மணிநேரத்தில் 600 பேர் சிறைபிடிக்கப்பட்டார்களென்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

29உ சோம்நதிக்கரையில் ஆடிமீ 1உ யிலிருந்து புரட்டாசிமீ 19உ வரையில் காயமடையாத 30000 பேரையும் காயமடைந்த 4500 பேரையுஞ்சிறைபிடித்து 14 பீரங்கிகளையும் 50 மெசின்பீரங்கிகளையுங் கைப்பற்றி 113 சதுரமைல் பூமியையும் வசப்படுத்தினோம். செர்மனியர் வேர்டன்பகுதியில் ஆறுமாசத்தில்வசப்படுத்திய ஸ்தலங்களிலும் நாம் அதிகமான ஸ்தலங்களைவசப்படுத்தினோம் என்று பிரான்சியசெய்தி கூறுகிறது.

ஐப். 1உ பிரித்தானியர் மாடின்பூர்சுக்கும் கவிடீகோட்டுக்குமிடையில் முன்னேற்றமடைந்தனர். 600 பேரைக் கைதிகளாக்கினர்.

பிரான்சர் சோம் போர்முனையில் செர்மனியகாவலிடங்களைத் தகர்க்கின்றனர்.

1உ நேற்றிரவு இப்பிரிசுக்கும் தியூசபேலுக்கும் மத்தியில் 16 முறைதாக்கிஅனேகரைச்சிறைபிடித்துச்சத்துருக்களுக்கு அதிகசேதம்விளைத்தோம்.

சென்றவாரம் டிக்ஸமூடில் பெரியபீரங்கிச்சண்டைநடந்தது அரண்களில் விசேஷசேதமுண்டாயின 3 லட்சம்பேர்கொண்டபிரித்தானியசேனை சோம்நதிக்கும் ஆங்கரநதிக்கும் மத்தியில் நிறுத்தப்பட்டிருக்கிறதாம்.

2உ கொர்சிலெட்டுக்குவடக்கே கடும்போர் நடக்கிறது சத்துருக்கள் நம்மைத்திருப்பிஎதிர்த்ததால் ரெஜினா அரணில்ஒருபாகத்தை நாம்விட்டு அப்புறஞ்செல்லவேண்டி நேரிட்டது அப்பாயிக்குக்கிழக்கே நமது முன்பாகஸ்தலங்களைச் சத்துருக்கள்தாக்கியும் பின்னிடச்செய்தோம் ஸார்லிவேட்டுக்குவடக்கே லெஸ்சன் டி ரோன்சென்னும் அரண்பக்கமாய் 1200 யார் தூரத்துள்ள ஓரிஸ்தலத்திருந்து நமதுவரிசையை ஸ்தாபித்துக்கொண்டோம்

3உ சுபாக்சேட்டிலும் அதைச்சுற்றிலுமுக்கிரமானசண்டைநடந்தது சத்துருக்கள் கொஞ்சஸ்தலத்தை வசப்படுத்திக்கொண்டார்கள் இருவர் உத்தியோகஸ்தரையும் 62 போரையும் சிறைபிடித்தோம் நேற்றுஓர்சத்துருப்புகைக்கூண்டு தீப்பற்றிவிழும்படிசெய்யப்பட்டது 2 சத்துருவிமானங்களும் சேதமாக்கப்பட்டன வேறுசிலவிமானங்களும் கீழேவீழ்த்தப்பட்டன, நமக்குச்சேதமில்லையென்று பிரித்தானியசெய்திகூறுகிறது.

2உ பிரான்சியபோர்முனையில் ரான்கோட் மார்வல்என்னுமிடங்களிலுள்ள அரண்கள் பிடிக்கப்பட்டன.

பூராவெளிசுக்குக்கிழக்கே ஒரரணைப் பிரான்சர் பிடித்தனர்.

3உ பிரித்தானிய கடற்படைவிமானங்கள் பிரசல்ஸ் நகருக்கு அருகாமையிலுள்ள சத்துருவிமானக்கொட்டகைகளை மறுபடிதாக்கின. ஒன்று திரும்பிவரவில்லை,

சோம்நதிக்கரையில் 2 சத்துருவிமானங்கள் கீழேவீழ்த்தப்பட்டன.

4உ யாகோட்டிலிருந்து சத்துருக்களை அப்புறப்படுத்தினோம். இவ்விடம்முழுதும் நமதுவசமிருக்கிறது என்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

மார்வலுக்கும் லாஸ்நோட்டுக்கும் மத்தியிலிருக்கும் பலமான அரண்முழுவதையும் நாம் வசப்படுத்தி 200 செர்மனியரையுஞ் சிறைப்படுத்தினோம்.

5உ நமது காலாட்படை மார்வலுக்குக்கிழக்கே முன்சென்று 9 பீரங்கிகளை எடுத்தோம். மாட்டர் பீரங்கிகளால் அல்செசில் சண்டைநடக்கிறது என்று பிரான்சியசெய்தி கூறுகிறது.

4உ ஆங்கரநதிக்குத் தெற்கேயுள்ள பிரித்தானியபோர்முனையில் இரவில்குண்டுகளெறியப்பட்டன. காலாட்படை லைஸ்பென்பீட்டுக்கு வடக்கே நடமாடிக்கொண்டிருந்தபோது நமதுபீரங்கிப்படையிருந்து உயிர்ச்சேதத்தை விளைத்ததுஎன்று பிரித்தானியசெய்தி கூறுகிறது.

5உ ஓர் பிரான்சியவிமானம் கோல்மரிலுள்ள ஆகாயவிமானக்கொட்டகையைப் பீரங்கிகளால் தகர்த்தது.

சிப்ருக்கிலுள்ள ராணுவகட்டிடமீதும் மின்சாரசோதனை விளக்குகள்மீதும் 90 குண்டுகள் எறியப்பட்டன.

பால்கன்.

24உ ஸ்ட்ருமா போர்முனையின் மூன்று இடங்களில் நதியைக்கடந்துசென்றனர். செலிம்டன்பட்டினம் வசப்படுத்தப்பட்டது. பல்கேரியர் துணைப்படைசேர்த்துச் சேர்வியரைப் பலமாயெதிர்த்தும் காசமாக்காலன்என்னும் மேட்டுபூமியில் 150 யார்தூரம் முன்னேறினர். டொப்ருட்சாவில் 8 பீரங்கிகள் பிடிக்கப்பட்டன.

26உ ஞாயிற்றுக்கிழமை ஐக்கியகட்சியார் பிளோரினாவுக்குச் சுற்றுப்பக்கத்தில் சத்துருக்களை வலுவில்தாக்கி ருசியர் ஒரு முக்கியமானகுன்றையும் பிரான்சர் ஒரு கிராமத்தையும் பிடித்தார்கள். சேர்வியர் எல்லையைக்கடந்து சென்றார்கள்.

27உ சத்துருக்கள் காசமாக்காலன் என்னுமிடத்தைத் துணைப்படைசேர்த்துவந்து திருப்பியெதிர்க்கஎத்தனித்தும் பின்தள்ளப்பட்டார்கள். பலர் சிறைபிடிக்கப்பட்டார்கள்.

ஐப். 1உ ஸ்ரிருமாநதிக்கரையில் பல்கேரியவரிசையை அங்கிலேயர் வசப்படுத்தினர். அவர்கள் திருப்பி எதிர்த்தும் பின்தள்ளப்பட்டார்கள். 100 பேர் சிறைபிடிக்கப்பட்டார்கள். வெள்ளிக்கிழமை சேர்வியர் பல்கேரியரைப் பாளிஸ்டாவுக்கு வடக்கிலுள்ள மலைச்சிகரத்திலிருந்து அப்புறப்படுத்தினர். பல்கேரியர் 150 பேரையும் 55 துப்பாக்கிகளையும் திரளானசாமான்களையும் விட்டுப் போயினர்.

2உ இந்தமீ 1உ பிரித்தானியர் திறமையுடன்தாக்கி அரண்படுத்தப்பட்ட பல கிராமங்களைப் பிடித்தனர். சேர்வியர் காசமாக்காலனில் பல்கேரியரின்பலத்தை ஒடுக்கிவிட்டார்கள். பல்கேரியர் பலபிணங்களையும் ஒரு பீரங்கிப்படையையும் விட்டுவிட்டுப்போயினர். சேர்வியர் ஒன்றரைமைல்தூரம்பல்கேரியரைப் பின்தொடர்ந்து அவர்களின் 8 பட்டாளங்களைப் பின்னிடச் செய்தனர்.

3உ ஸ்ட்ருமாநதியின் கீழ்க்கரையில் நமது புதியஸ்தலங்களைத் திருப்பியெதிர்த்தமூன்று பல்கேரியபட்டாளம் பலத்தொடுக்கிப் பின்சென்றன பின்பு ஒரு பிரித்தானியபட்டாளம் சட்டியால்குத்தி அவர்களை முற்றும் பின்தள்ளிவிட்டது 40 பேர் சிறைபிடிக்கப்பட்டனர் சேர்வியர் சத்துரு முதல்வரிசைஅரணையும் பீரங்கிப்படை ஸ்தலத்தையும் பிடித்துக்கொண்டனர்

பிரித்தானியர் மெழுளிக்கோவைப்பிடித்தனர் சத்துருக்கள் திருப்பியெதிர்த்தும் பின்தள்ளப்பட்டனர் மூன்றாம்முறையும் புதுசேனைகள் வந்து நம்மைத்தாக்கிக்கொண்டிருந்தன சத்துருக்களுக்குச் சேதமதிகம்

பல்கேரியர் சேர்வியர் பலன்பெற்றதினால் ஸ்டாகோவிரேஸ என்னுமிடத்திலுள்ள தமது இடங்களைவிட்டு வடக்கே பின்செல்கிறார்களென்று தெரிகிறது சேர்வியர் செர்வியோ என்னுமிடத்தைவசப்படுத்தினர் பிரான்சர் பிடார்ஸ்க்கையும் அர்மிமையும் வசப்படுத்தினர் வலப்பக்கத்தில் பிரித்தானியர் கனிகோவைப் பிடித்துக்கொண்டனர்

5உ செனிக்கோமுழுதும் இப்பொழுது நமது வசமிருக்கிறது போர்முனைமுழுதும் நமக்கு அநுகூலமாய்ச் சண்டைநடக்கிறது ருஷியசேனையின் முன்னணிகள் செர்னாநதியைக் கடந்துசெல்ல ஆரம்பித்துவிட்டன அவை பப் பாப்ளி என்னும் இரண்டிடங்களுக்கும் அருகில் வந்துவிட்டன என்று சலோனிக்காவிலிருந்து தெரிவிக்கப்பட்டது

கிரேக்கு.

25உ கிரேக்கஅரசு பெயருக்குமாத்திரமிருக்கிறது எதென்சும் பெலோபோனிசஸ் நகருந்தான் வசத்திலுள்ள அரசாட்சிக்குட்பட்டிருக்கிறது மற்றப்பாகங்களெல்லாம் தனித்தனி பிரிந்துவிட்டன கலகக்காரருடன்சேரும்படி சலோனிக்காவுக்குச்செல்ல ஆயத்தமாயிருப்பதாகச் சந்தேகிக்கப்பட்ட ஜார்ஜியோஅவராப் என்னும்குருசர்க்கப்பலைச் சூழ்ந்துகொள்ளும்படி இங்கிலீஷ்கடற்படைக்கு உத்தரவளிக்கப்பட்டதாம் சாதியபிமானமுயற்சியாவின்தால் அரசாட்சிஅதிகாரிகளுக்குத் தப்பி ராணுவஉத்தியோகஸ்தர் சலோனிக்காவுக்குச்சேருகின்றனர். 300பேர்போய்ச்சேர்ந்துவிட்டனர் பலர்புறப்படுகையில் சிறைபார்க்கப்பட்டார் மீதியானவலண்டிய யுத்தவீரர் சலோனிக்காவைச்சேருகின்றனர் சலோனிக்காவிலுள்ள கிரேக்கப்படைமாலுமிகள் கலகஞ்செய்து அக்கப்பலை வலண்டியர்களை ஏற்றிப்போக சுதேசகட்சிக்கு ஒப்புவித்துவிட்டனர்.

கிரீட்தீவில் ராணுவசேனைகள் கலகக்காரரைத் தாக்கப் பலரைக்கொன்று பலரைக்காயப்படுத்தின கலகக்காரர் அப்பட்டினத்தைப் பிடித்து சிவில்அதிகாரிகளை ஒழித்துவிட்டனர் செர்மனியர் கலகக்காரருடன்சேர்ந்து கேனியாவில் நுழைய எத்தனித்துக்கொண்டிருக்கிறார்கள் கிரீட் தீவின் பெரும்பாகம் கலகக்காரர்வசமிருக்கிறது

26உ பழைய முதன்மந்திரியாகிய எம் வெனிசிலாஸ் அட்மிரல் கண்டோரியோடிஸ் உடனும் பெரிய உத்தியோகஸ்தருடனும் வேறனேகருடனும் புறப்பட்டுச்சென்று, கிறீற்தீவுக்குப் போனதாய் தோற்றுகிறது.

பெரிய கிரேக்கசேனாபதியான ஜெனறல் மாஸ்கோபூலாஸ் தம் உத்தியோகத்தை இராசினாமாச் செய்துவிட்டார்.

27உ வெனிசிலாஸ் சுதேசஅரசாட்சியை ஏற்படுத்த முயற்சிக்கிறார். அதனால் தான் கிரேக்கஅரசை அவமதித்ததாக உத்தேசிக்கவில்லையென்றும் மசிடோனியாவைக் காக்கும்படி ஒருசேனையைச்சேர்க்க யோசிப்பதாயுஞ்சொல்லுகிறார். [illegible] சுயஅரசாட்சியை ஸ்தாபித்திருக்கிறது ஆயினும் அது தேசபாதுகாப்புக்கொம்மிற்றியின் உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது.

ஆசியாத்துருக்கிக்கு மேற்கிலிருக்கும் மைடிலீன்தீவும் தேசபாதுகாப்புமுயற்சியிற் கலந்துகொண்டது.

ஹைடிரா என்னுஞ் சண்டைக்கப்பல் ஐக்கியகட்சிக் கடற்படையுடன் சேர்ந்துவிட்டது.

மந்திரிசபை அரசனுடைய சம்மதத்தைத்தெரிந்து நேசகட்சியாருடன் கலந்து வேலைசெய்யத் தீர்மானித்ததாம்.

கிரேக்கு பல்கேரியாவுடன் சண்டைசெய்யத் தீர்மானித்துவிட்டதாம்

கிரேக்கசபையின் அபிப்பிராயங்களை அறிவிக்கும்படி லண்டனுக்குப்போயிருந்த அக்கிரேக இளவரசனை அரசர் திருப்பிஅழைத்துக்கொண்டார். அரசர் பல்கேரியரை எதிர்க்க ஏற்பாடுசெய்யாவிடில் சுயாதீனமுயற்சிக்காரர் ஒற்றுமையுடன் வேலைசெய்ய ஆரம்பிப்பார்களென்ன வெனிசிலாசும் கொண்டேயோடிசும் விளம்பரம் விடுத்திருக்கிறார்கள்.

30உ தேசபாதுகாப்புச்சங்கத்தார் கிரீற்றிலைச்சேர்ந்த அரசின் சம்மதப்படி கிரேக்கிலிருந்து சென்மசத்துருக்களைத் துரத்தப் பிரயாசப்படவேண்டும் என்று விளம்பரஞ்செய்தனர்.

1உ டேடாவில் அரசமாளிகையிலிருந்த பாதுகாப்புச் சேனையைச்சேர்ந்த போர்வீரரும் உத்தியோகஸ்தருமான 154 பேர் சாதியபிமானச்சங்கத்தில் சேரும்படிசலோனிக்காவுக்குப்போயினர்

உத்தியோகஸ்தர்கலககட்சியில்சேரக்கூடுமென்று கடுமையானவிதிகளை அரசாட்சிசெய்திருக்கிறது கடற்படைஉத்தியோகஸ்தரில மூவர் பிடித்தடைக்கப்பட்டனர்

2உ சாவதிபிவிர்த்தி அரசாட்சி சியோஸிலும் மைடிலனிலும் அதிகாரத்தைச் செலுத்திக்கொண்டிருக்கிறது

3உ கிரேக்கமுதன்மந்திரியும் அந்நியதேசமந்திரியும்தவிர மற்றோர் தம்வேலையை இராசினாமாச்செய்துவிட்டார்

ஓர் இத்தாலியசேனை ஆர்கைரோகாஸ்டிரோவென்னும் இடத்தை வசப்படுத்திக்கொண்டது வேறொருசேனை டெல்வினோவை வசப்படுத்திக்கொண்டது இரண்டிடங்களிலுமுள்ள கிரேக்க

...னை பின்வாங்கிற்று கிரேக்கமந்திரிசபை ஐக்கிய கட்சிப் பிரதிநிதிகளுடன் கலந்து யோசிக்க கூடாமலும் சாதிவிசாரணைகளை ஏற்படுத்தற்குத் தடையாயிருக்கிறதினால் கலைக்கப்போயிற்று எல்லா மந்திரிமாரும் இராஜிநாமாச்செய்துவிட்டனர்

5உ எம். டி. மிட்ராகோபுலாஸ் புதிய மந்திரிசபையை ஏற்பாடுசெய்வாரென்றும் அதில் வெனிசெலாஸ்கட்சியார் மூவர் சேர்ந்திருப்பார்களென்றும் தெரியவருகிறது எம். சைமிஸ் தம்வேலையை இராஜிநாமாச்செய்தபோது இவர் அவரிடத்திற்கு அழைக்கப்பட்டார் அவர்அதை ஒப்பவில்லை மந்திரிசபையில் பெரும்பாலார் ஐக்கியகட்சியுடன் சேரவேண்டுமென அரசர் மறுத்ததினாலேயே சபை குலைந்ததாம்

ருமேனியா.

25உ கெலிபூட் வார்ஸிகை ருமேனியர் வசப்பட்டதினால் திரான்ஸில்வேனியாவில் மூன்றிலொருபாகமான 1,500சதுரமைல்விஸ்தாரமான இடம் ருமேனியர் வசமாயிற்றென சம்பவித்தது அவ்வசத்திற்படில் அங்கிருந்து 375 கீழமுன்போர்முனையை 187½ மைலாகக் குறைக்கவசதியுண்டாகும்

27உ திரான்ஸில்வேனியாவில் உக்கிரசண்டையின்பின் ருமேனியர் முன்சென்றனர் சத்துருக்கள் டொப்ருட்சாவில் கூட்டமாய்ச்சேர்ந்து ருமேனியரை மூன்றுமுறைதாக்கியும் பின்தள்ளப்பட்டனர். கிழக்கேழமை சத்துருவிமானங்கள் புகாரெஸ்டுநகர்மேல் குண்டுகளை எறிந்தன. ஓர் ஆஸ்பத்திரிமேலும் அநாதசாலைமேலும் குண்டுகள்வீழ்ந்து 60 பேர் இறந்துபோயினர். விசேஷமாய் ஸ்திரிகளுக்கும் குழந்தைகளுக்குந்தான்சாயம். கிங்கிழமை ஓர் ஒருசெப்பிளின் புகாரெஸ்டுநகர்மேல் குண்டுகளை எறிந்து 5 குழந்தைகளைக் கொன்றுவிட்டது.

கார்லிமான்ஸ்லேப்பிரதேசத்தில் நாம் முன்னேறி 73 பேரைச் சிறைபிடித்தோம் லெர்மான்ஸ்டாட்டில் 4 உத்தியோகஸ்தரையும் 300 பேரையும் 5 மெஷின்பீரங்கிகளையும் பிடித்தோம். ஒன்பன்னாத்தாக்கில் 2 மெஷின்பீரங்கிகளைப்பிடித்தோம். இதுவரை 48 உத்தியோகஸ்தரும் 6836 பேரும் சிறைபிடிக்கப்பட்டார்கள். டொப்ருட்சாவில் ஒரு உத்தியோகஸ்தரும் 53 பேருஞ் சிறைபிடிக்கப்பட்டனர். ருஷியர் 20 0 பேரைச் சிறைபிடித்தனர்.

27உ டொப்ருட்சாவில் 19உ முடிந்த பெரிய சண்டை டான்யூப்நதியிலிருந்து கருங்கடற்கரைவரையில் வியாபித்திருந்தது. சத்துருக்கள் பிரதானமாய்ச் செர்மனியர் செர்னேவோடாவுக்குள் நுழைய எத்தனித்தார்கள். ருமேனியர் கட்டியார்குக்கியும் பீரங்கிப்பிரயோகஞ்செய்தும் பின்தள்ளிவிட்டனர். இரண்டு மூன்றுநாட்களாய்க் கடுஞ்சண்டைசெய்து கூட்டங்கூட்டமாய்வந்த சத்துருக்கள் ருமேனியரின் பீரங்கிப்பலத்தால் பின்னடைந்தார். 19உ ஐக்கியகட்சிகள் சத்துருக்களைப் பலமாய்த் திருப்பியடித்ததால் அவர்கள் வலப்பக்கப்படை குழப்பமாய்ப் பின்னிட்டது. ஓர் படைவகுப்பின்முன் 5000 தப்பாக்கிகள் பொறுக்கியெடுக்கப்பட்டன. ஐக்கியகட்சியார் முன்செல்லுகின்றனர்.

28உ வல்கன்பாசில் ருமேனியர் சத்துருக்களைப் பின்னிடச்செய்தார்கள்.

ஒரு செப்பிளினும் ஆறு செர்மன்விமானங்களும் புகாரெஸ்டின்மீது குண்டுகளை எறிந்தன 40 பேர் கொல்லப்பட்டனர். 50 பேர் காயப்பட்டனர். 75 பேர் கொல்லப்பட்டார்களென்றும் பெரும்பாலார் ஸ்திரிகளும் குழந்தைகளுந்தான் என்றும் உத்தியோகமுறையில் அறிவிக்கப்பட்டது.

ஐப். 1உ கெர்மான்ஸ்டாட்டிலுள்ள உதவிசேனைகள் வலிய சத்துருக்களால் இருபக்கமுந் தாக்கப்பட்டு மூன்றுநாள் சண்டைசெய்தது. தென்மேற்கில்தாக்கிய சத்துருச்சேனையைப் பின்தள்ளிவிட்டுத் தென்திசையைநோக்கித் தமது போக்குவரவினை மறுபடி ஸ்தாபித்துக்கொண்டன. ருமேனியர் தென்புறமாய்ப் பின்வாங்கிச்சென்றனர். வட, வடமேற்குப்போர்முனைகளில் சாதாரண சண்டைநடந்துகொண்டிருக்கிறது. அதில் 600 பேரைச் சிறைபிடித்தோம். சத்துருக்கள் ரோடேஸ்பிக்காவிலிருந்து இறங்க எத்தனித்து பின்தள்ளப்பட்டார்களென ருமேனியசெய்தி கூறுகிறது.

3உ தெற்குப்போர்முனையில் நாம் டான்யூப்நதியைக்கடந்துசென்றோம். வடக்குப்போர்முனையில் 511 பேரைச் சிறைபிடித்தோம். டொப்ருட்சாவில் சத்துருப்படைகளைப் பின்தள்ளிவிட்டோமென்று ருமேனியஅறிக்கை கூறுகிறது

